IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No. 166/2020**

**நாள்– 08.01.2025**

**ம.சா.1 திரு. முருகன்** – சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எனக்கு 48 வயதாகிறது. இறந்துபோன எனது அப்பாவின் வயது, வருமானம் குறித்த ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 8 ஆவணத்தின் படி எனது தந்தையின் வயது 85 என உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 2, வாரிசு சான்று ஆவணத்தின் படி எனது வயது 55 என உள்ளது என்றால் சரிதான். அதில் 2 வது மனுதாரர் அந்தோணியம்மாளின் வயது 60 என காட்டடப்பட்டுள்ளதுஎன்றால் சரிதான். அதில் எனது தாயாரின் வயது 81 என காட்டடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் திருமணம் ஆகி தனித்தனியே வசித்து வருகிறோம் என்றால் சரிதான். இறந்துபோன நபரை சார்ந்து நாங்கள் வாழவில்லை என்றும், எனவே அந்த தலைப்பில் எந்த வித இழப்பீடும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.சா.ஆ. 7 குற்றப்பத்திரிக்கையில் 279, 338 இ.த.ச படி தான் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து காயத்திற்கும் எனது தந்தையின் மரணத்திற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 4 விபத்து பதிவேட்டில் எனது தந்தைக்கு கொடுங்காயம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ. 8 இறப்பு சான்றிதழில் எனது தந்தை இறந்ததேதி 04.04.2019 என உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ. 7 குற்றப்பத்திரிக்கை 30.06.2019 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தையின் விபத்துகாயங்களுக்கும் அவரது மரணத்திற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லாத காரணத்தினால் தான் 304(A) IPC படி வழக்கு பதிவுசெய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை வயோதிகத்தின் காரணமாக இறந்துவிட்டார் என்றும், விபத்தின் காரணமாக இறக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது தந்தை

விபத்தின் காரணமாக தான் இறந்தார் என்பதற்குண்டான பிரேத பரிசோதனை அறிக்கை உட்பட எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தையின் இறப்பிற்கும் காயத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லாத காரணத்தினால் மோட்டார் வாகன சட்டப்படி எந்த இழப்பீடும் கோர இயலாது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ சிகிச்சைக்கான ஆவணங்கள் அனைத்தும், எனது தந்தை வயோதிகத்திற்காக சிகிச்சை பெற்ற குறிப்புகள் தான் என்றும், அதற்கும் விபத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 13 அருண் நர்சிங் ஹோம் ஆவணத்தில் விபத்திற்கு முன்னர் 13.03.2019ம் தேதியே சிகிச்சை பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை மதித்து கவனமாக வாகனத்தை ஓட்டி சென்றார் என்றும், எனது தந்தையின் கவனக்குறைவாலும், வயோதிகத்தின் காரணமாலும் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே 3ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு எந்த ஒரு இழப்பீடும் வழங்கதேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 24.03.2019ம் தேதியிட்ட பரணி ஸ்கேன்ஸ் மருத்துவ ரசீதுகள் ரூ.10,300/-க்கு 2 முறை குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

ஒம்/-S.மனோஜ்குமார்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி.